கனடியத் தமிழர் தேசிய அவை
National Council of Canadian Tamils
Conseil National de Tamouls Canadien

**கனடா ஒட்டாவா பாராளுமன்றத்தில் பயங்கரவாத தாக்குதல், கனடியத் தமிழர் தேசிய அவை கண்டனம்.**

உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாகத் திகழந்து, பல்லின மக்களையும் அரவணைத்து. அமைதிப் பூங்காவாக விளங்கும் கனடிய மண்ணின் ஒட்டோவா பாராளுமன்றத்தில் (22-10-2014) புதன்கிழமையன்று இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலானது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்.

இந்த தாக்குதலில் தனது இன்னுயிரை தியாகம் செய்து கொண்ட Cpl. Nathan Frank Cirillo அவர்களுக்கு அஞ்சலியையும் மரியாதையையும் செலுத்துகின்ற அதே வேளை, அவர்தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் கனடியத்தமிழர் சார்பாகத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பல்லின மக்களையும் அரவணைத்து வேற்றுமையின்றி ஒற்றுமையுடன் திகழும் கனடிய மண்ணில் நடைபெற்ற பயங்கரவாத தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கும் பாதுகாப்பிற்கும், கனடியத்தமிழர்களும் தமது ஒத்துழைப்பினை நல்கும் அதே வேளை, கனடிய மண்ணின் அமைதியையும் பாதுகாப்பையும் குலைக்க முனைபவர்களையும் கண்டிக்கின்றனர்.

மேலதிக தொடர்புகளுக்கு: கனடியத் தமிழர் தேசிய அவை

தொலைபேசி: 416-830-7703 | மின்னஞ்சல்: info@ncctcanada.ca

முகநூல்: facebook.com/canadianncct